13.03.2026

<u>கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் )</u>

<u>விழுப்புரம்</u>

<u>அமர்வு வழக்கு எண். 145/2025</u>

அ.சா.5

| | | | |
|---|---|---|---|
| பெயர் | நடராஜன் | | |
| த/பெ | பரமசிவம் | | |
| கிராமம் | நெய்வேலி | தொழில் | காவல் ஆய்வாளர் |
| தாலுக்கா | நெய்வேலி | வயது | 43/2026 |
| மாவட்டம் | கடலூர் | தேதி | 13.03.2026. |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிராமணம் செய்யவிக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது விழுப்புரம் மண்டலம் மத்திய நுண்ணறிவு பிரிவில் ( அமலாக்கம்) காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2023 - ம் வருடம் விழுப்புரம் மாவட்டம் கண்டமங்கலம் காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன். அப்போது வெள்ளத்தங்கம் என்பவர் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தார். அவரது கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம். கடந்த 23.12.2023 ம் தேதி அவர் நிலையத்தில் இருந்தபோது, விழுப்புரம் மாவட்டம் அற்புசம்பாளையம் கிராமத்தை சேர்ந்த நாகப்பன் மகன் தவசி என்கிற சுரேந்தர் நிலையம் ஆஜராகி கொடுத்துக்கொண்ட எழுத்து மூலமான புகாரை காலை 9.00 மணிக்கு பெற்று நிலைய குற்ற எண்.600/2023 இ.த.ச.பிரிவுகள் 341, 323, 397, 506(2) -ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். அவர் பெற்ற புகார் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அச்சு முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த புகாரில் மேற்படி நபர் 22/12/2023-ம்

தேதி இரவு சுமார் 7.00 மணியளவில் இருசக்கர வாகனத்தில் வந்தபோது, சின்னபாபு சமுத்திரம் ஆர்ச் அருகில், பின்னர் பெயர் விலாசம் கேட்டு தெரிந்த அறிவு என்கிற அறிவழகன் த/பெ.தாண்டவராயன், சின்னபாபு சமுத்திரம் என்பவர் வழிமறித்து கத்தியை காட்டி மிரட்டியும், கன்னத்தில் அறைந்தும், பாக்கெட்டில் இருந்த ரூ.200/-யை வழிப்பறி செய்ததாக சொல்லப்பட்டிருந்தது. மேற்படி புகாரையும், அச்சு முதல் தகவல் அறிக்கையும் சேர்த்து முறையாக நீதித்துறை நடுவர் எண்.2 விழுப்புரம் அவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளார். ஒரு பிரதியை மேலதிகாரிகளுக்கும், மற்றொரு பிரதியை விசாரணைக்காக என் பார்வைக்கு வைத்ததை நான் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, புகார்தாரர் சுரேந்தர், சம்பவ சாட்சி அய்யனார், மற்றும் ஒரு சாட்சி இராமமூர்த்தி ஆகியவர்களை விசாரணை செய்து, தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவ இடம் சென்று சாட்சிகள் நடராஜன், ராஜேந்திரன், ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடம் குறித்து முடிவு செய்ய 23ம் தேதி காலை 10.00 மணியளவில் ஒரு பார்வை மகசரும், மாதிரி வரைபடமும் தயார் செய்தேன். பார்வை மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். நான் தயார் செய்த பார்வை மகசர் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகசர் சாட்சிகளை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சம்பவம் உண்மை என தெரிய வந்ததால் எதிரியை தேட என் ரகசிய புலனாளி எனக்குத் தந்த ரகசிய தகவலின் பேரில், அன்று மதியம் 1.00 மணியளவில் சின்னபாபு சமுத்திரம் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் நின்றிருந்த எதிரி அறிவு என்கிற அறிவழகனை ரகசிய புலனாளி மற்றும் சாட்சி அடையாளம் காண்பிக்க காரணம் கூறி மதியம் 1.05 மணிக்கு கைது செய்தேன். கைது விவரத்தை அவரது மனைவி மகேஸ்வரிக்கும், இலவச சட்ட அலுவலக வழக்கறிஞர் திரு.பிரேம்குமார் அவர்களுக்கு தெரியப்படுத்தினேன். பின்பு சம்பவம் குறித்து அவரை(எதிரியை) விசாரணை செய்ய, அவர் எந்த வற்புறுத்தலும், துன்புறுத்தலும் இன்றி தானாக ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்துக்கொண்டார். அதை சாட்சிகள் ஏழுமலை த/பெ.முனுசாமி, தண்டபாணி த/பெ.முருகேசன், ஆகியோர்கள் முன்னிலையில் அன்று 1 - 15 மணிக்கு பதிவு செய்தேன். பின்பு எதிரி, சாட்சிகளிடம்

அதில் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை அழைத்து சென்றால், சம்பவத்திற்கு பயன்படுத்திய கத்தியை எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு மதியம் 2-10 மணியளவில் அதே சாட்சிகள் முன்னிலையில் பஞ்சாயத்து அலுவலகம் அருகில் இருந்து ஆஜர் செய்த ஒரு பச்சை, கருப்பு, சிமெண்ட் கலர் பேனா கத்தி ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகசரில் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த கத்தியை பார்த்தால் என்னால் அடையாளம் கூற முடியும் என்று சாட்சி கூறினார். சாட்சி அதை சரியாக அடையாளம் காண்பித்தார். அந்த கத்தி சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு எதிரி மற்றும் சான்று பொருளுடன் நிலையம் வந்து எதிரியை பாராவிடம் ஒப்புவித்து பின்பு உச்சநீதிமன்ற கட்டளைகளை பின்பற்றி முறையாக நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்பு என் விசாரணையில் புகார்தாரரின் கன்னத்தில் எதிரி அறைந்ததாக புகாரில் சொல்லப்பட்டிருந்தது. ஆனால் காயம் எதுவும் இல்லாததாலும், மருத்துவரிடம் சிகிச்சை எதுவும் பெறாததாலும், இ.த.ச. பிரிவுகள்,341, 323, 397, 506(2) -ல் இருந்து 341, 352, 397, 506(2) -ன் கீழ் ஒரு பிரிவு மாற்ற அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரிவு மாற்ற அறிக்கை அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்கு சொத்தினை படிவம் 95, மற்றும் அனைத்து ஆவணங்களையும், நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். மேற்படி படிவம் 95 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது. உதவி ஆய்வாளர் திரு.வெள்ள தங்கம் என்பவர் விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன். பிறகு என் விசாரணை முடித்து, எதிரி அறிவு என்கிற அறிவழகன் த/பெ.தாண்டவராயன் என்பவர் மீது இ.த.ச. பிரிவுகள் 341, 352, 397, 506(2) -ன் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அத்துடன் மற்ற ஆவணங்கள் அனைத்தையும் முறையாக நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். என் விசாரணையில் சாட்சி சுரேந்தர் தான் பாதிக்கப்பட்ட விவரத்தையும், காவல் நிலையம் சென்று புகார் கொடுத்துக் கொண்டது பற்றியும் என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி அய்யனார் சுரேந்தருக்கு அனுசரனையாக

சம்பவத்தை நேரடியாக பார்த்ததாக தான் என் விசாரணையில் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி நடராஜன் நான் சம்பவ இடம் சென்று பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தபோது உடனிருந்து தானும், ராஜேந்திரன் என்பவரும் கையொப்பம் செய்தோம் என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். சாட்சி தண்டபாணி எதிரியை கைது செய்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்த போதும், கைப்பற்றுதல் மகசர் தயார் செய்த போதும், தானும், ஏழுமலையும், உடனிருந்து அவைகளில் கையொப்பம் செய்ததாக தான் சொல்லியுள்ளார் என்றால் சரிதான்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>

நான் சொல்வது போல புகார்தாரர் உதவி ஆய்வாளரிடம் எந்த புகார் கொடுக்கவில்லை என்றும், நாங்களாகவே புகார்தாரரிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் மற்றும் பெற்றுக்கொண்டு, ஒரு புகாரை தயார் செய்தோம் என்றும், நான் எந்த சாட்சிகளையும் சரியாக விசாரணை செய்யவில்லை என்றும், அதேபோல் நாங்கள் இந்த வழக்கில் தயார் செய்த ஆவணங்கள் அனைத்தும் சம்பவ இடம் செல்லாமல் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டவை என்றும், எதிரியிடமிருந்து நாங்கள் எந்த ஒரு ஒப்புதல் வாக்குமூலமும் பெறவில்லை என்றும், ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றும், நாங்களாகவே எதிரி மீது ஒரு பொய்யான இறுதி அறிக்கையை தாக்கல் செய்து விட்டோம் என்றும், சொன்னால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u>

<u>இல்லை</u>